பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 110

15.10.2026

லஞ்சம் கேட்டு பெற்ற வணிக ஆய்வாளர் மற்றும் கேங்மேன் கைது

புகார்தாரர் திரு.சுரேஷ் குமார், கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துகடவு வட்டம், நல்லட்டிபாளையம் கிராமத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தனது தந்தைக்கு சொந்தமான விவசாய நிலத்தில் 7 ஹெச்பி மின்மோட்டார் பொறுத்துவதற்காக கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துகடவு வட்டம், தாமரைக்குளத்தில் உள்ள தமிழ்நாடு மின் பகிர்மான கழக அலுவலகத்தில் மும்முனை மின்சார இணைப்பு வேண்டி விண்ணப்பித்திருந்தார். மும்முனை மின் இணைப்பு வழங்குவதற்காக திரு.வேல்முருகன், வணிக ஆய்வாளர், தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் தாமரைக்குளம், கிணத்துகடவு, கோயம்புத்தூர் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.1,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கோயம்புத்தூர் பிரிவில் அளித்த புகாரின் பேரில் நேற்று 14.10.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.வேல்முருகன், வணிக ஆய்வாளர் அவர்களின் உத்தரவின்படி திரு.நவின்குமார், கேங்மேன் அவர்கள் ரூ.1,000/- லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

PRESS RELEASE – 110
15.10.2026

COMMERCIAL INSPECTOR AND GANGMAN TNPDCL ARRESTED FOR BRIBE

The complainant, Sureshkumar, a resident of Nallatipalayam Post, Kinathukadavu, Coimbatore District, had applied for a three phase electricity service connection for a 7 HP motor to be installed on his father's agricultural land at the Office of the Assistant Engineer, Tamil Nadu Power Distribution Corporation Limited (TNPDCL), Thamaraikulam, Kinathukadavu, Coimbatore District. Tr.Velmurugan, Commercial Inspector, TNPDCL, Thamaraikulam, Kinathukadavu, Coimbatore District, demanded a bribe of Rs.1,000/- from the complainant for providing the three phase electricity service connection. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Coimbatore detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized yesterday (14.10.2026). During trap proceedings, on the instruction of Tr.Velmurugan, Commercial Inspector, Tr.Naveenkumar, Gangman demanded and accepted the bribe amount of Rs.1,000/- from the complainant. Both accused were arrested and sent to judicial custody.